முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1062

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.08.2022**, வெள்ளிக்கிழமை

1. வேலவன் என் சக்தி சொரூபனே
   வினை வெல்ல வந்த ஆறுமுக அரங்கனே
   காலனை அச்சுறுத்தும் வண்ணம்
   வரம்பல கலியுகத்தில் பெற்றுவந்த மாதவராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
   வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சுபகிருது வேங்கை திங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் ஆவணி மாதம் 10 நாள், 26.08.2022 வெள்ளிக்கிழமை)
3. தன்னிலே அரங்கனுள் சக்திபலம்
   தர்மமாக தக்க தண்டாயுதன் என் சூட்சும பலமாக
   ஆகவே நிலைகள் உயர இருக்க
   அரங்கன் திருவடி பற்றி உலகோர்
4. வரமென வேண்டி உடன் வந்தால்
   வையகத்தில் அவரவர்க்கும் வடிவேலன் என் காட்சி
   காட்சி உறுதியாகும் கருணைக்கொண்டே
   கண்டுரைப்பேன் தர்மவழி தொடர்ந்து வந்தால்
5. மாட்சிமைபட இந்த உலகினில் சகல இன்னல்களையும்
   மண்ணுலகில் அகற்றி பாதுகாப்பு மிக்க வாழ்வாய்
   வாழ்வினில் சர்வ பலமும் கண்டு
   வல்லமைபட அரங்கனால் ஞானியாகவே ஆற்றல்
6. தடையின்றி பெற்று உயர நேரும்
   தரணியில் தனித்துவம் கண்டு
   அரங்கன் வழி வரும் மக்களெல்லாம்
   எல்லோரும் ஞானவான்களாக
7. இந்த உலகை காக்கின்ற ஞானிகளாக மாற்றம் வல்லமை பட கண்டு
   வையகத்தில் அற்புதங்கள் நடத்தக்கூடும்
   ஆகவே அரங்கன் வாழ் பிரணவக்குடிலை
   அன்பர்கள் ஞான சபையாக
8. அரங்கன் தருகின்ற உபதேசங்களை
   ஆறுமுகன் யான் தரும் வேதமாக
   ஆகவே ஏற்று உலகோர் வந்தால்
   இந்த அகிலத்தில் சடுதி அற்புதம் நடக்கும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–